முக்கிய வார்த்தைகள்:
அன்பு கொள்வது
செயல்படுத்துவது
காட்டுவது/ வெளிப்படுத்துவது

**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**

**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**

**14 ஆகஸ்ட் 2026 / 01 ரபீவுல் அவ்வல் ஹிஜிரி 1448**

# இறைத்தூதர் முஹம்மது[ஸல்] அவர்களை நேசிப்பது

ٱلْحَمْدُ لِلَّهِ ٱلَّذِي هَدَانَا لِهَٰذَا وَمَا كُنَّا لِنَهْتَدِيَ لَوْلَا أَنْ هَدَانَا ٱللَّهُ. أَشْهَدُ أَنْ لَا إِلَٰهَ إِلَّا ٱللَّهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. ٱللَّٰهُمَّ صَلِّ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ، وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ ٱللَّهِ، ٱتَّقُوا ٱللَّهَ. قَالَ تَعَالَى فِي ٱلتَّنْزِيلِ: يَاأَيُّهَا ٱلَّذِينَ آمَنُوا ٱتَّقُوا ٱللَّهَ حَقَّ تُقَاتِهِ وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنْتُمْ مُسْلِمُونَ.

**வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அன்பும் அருளுமிக்க ஜமாஅத்தார்களே!**

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் கட்டளைகள் அனைத்தையும் நிறைவேற்றுவதன் மூலமாகவும், அல்லாஹ் தடைசெய்துள்ள அனைத்து விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்வதன் மூலமாகவும் அல்லாஹ்வின் மீது தக்வா [பக்தியை] ஏற்படுத்திக் கொள்ளுங்கள். ”தக்வா” வின் மூலமாகவே இம்மையிலும் மறுமையிலும் நாம் வெற்றியை அடைய முடியும்.

**எனது அன்பிற்குரிய சகோதரர்களே!**

இறைத்தூதர் முஹம்மது[ஸல்] அவர்களை நாம் உண்மையிலேயே நேசிக்கிறோமா? என்று நம்மிடம் கேட்கப்பட்டால், நாம் தயக்கமின்றி ”ஆம்” எனப் பதிலளிப்போம். இது சம்பந்தமாக, இன்றைய ”குத்பா” பிரசங்கம்

பின்வரும் கேள்விகளைப் பற்றிச் சிந்திக்குமாறு இங்குள்ள அனைவரையும் கேட்டுக் கொள்கிறது; அதாவது, இறைத்தூதர் முஹம்மது[ஸல்] அவர்கள் மீதான நமது அன்பை நாம் உண்மையில் எவ்வாறு **வெளிப்படுத்துகிறோம்**? இந்த **அன்பானது** வெறும் வார்த்தைகளுக்கு அப்பாற்பட்டது என்பதை நமது செயல்கள் நிரூபிக்கின்றனவா? எனச் சிந்திக்குமாறு கேட்டுக் கொள்கிறது.

**மரியாதைக்குரிய சகோதரர்களே**!

இறைத்தூதர் முஹம்மது[ஸல்] அவர்கள் மீது நாம் பல்வேறு வழிகளில் நமது **அன்பை வெளிப்படுத்துகிறோம்.** சிலர், அவர்களின் [ஸல்] அன்றாடப் போதனைகளான "சுன்னாஹ்" வைப் **செயல்படுத்துவதற்கு** கடின முயற்சி செய்கிறார்கள். சிலர், அவர்களைப் புகழ்ந்து கஸீதா அல்லது புர்தா ஓதுவதை **விரும்புகிறார்கள்.** மற்றவர்களோ தங்கள் பேச்சிலும் செயலிலும் அவர்களின் போதனைகளைப் பிரதிபலிக்க முயற்சிக்கின்றார்கள். எனினும். நாம் அவர்கள் மீது நமது **அன்பை வெளிப்படுத்தத்** தேர்ந்தெடுக்கும் வழி எதுவாக இருந்தாலும், இஸ்லாமிய சட்டத்தின் வரம்புக்குள் அவை இருக்கும் வரை அவற்றை நாம் தொடர்ந்து செய்து வருவோமாக!

இந்த **அன்பை**, நாம் தனியாக இருக்கும் போதும், நமது குடும்பத்தினர், வகுப்புத் தோழர்கள் அல்லது சக ஊழியர்களுடன் இருக்கும் போதும் நாம் **வெளிப்படுத்த** வேண்டும்; ஏன், பொது இடங்களிலும் கூட **வெளிப்படுத்த** வேண்டுமென இந்தப் பிரசங்கம் நமக்கு நினைவூட்டுகிறது. இவையனைத்தும் இறைத்தூதர்[ஸல்] அவர்கள் போதித்த போதனைகளின் ஒரு பகுதியாகும். மேலும், இவை இஸ்லாத்தின் உண்மையான உயிரோட்டத்தைப் பிரதிபலிப்பவையாகும்.

**அன்பிற்குரிய சகோதரர்களே**!

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, திருக்குர்ஆனின் "அத்-தவ்பா" எனும் அத்தியாயத்தின் 24-வது வசனத்தில் கூறுகிறான்:

قُلْ إِن كَانَ ءَابَآؤُكُمْ وَأَبْنَآؤُكُمْ وَإِخْوَٰنُكُمْ وَأَزْوَٰجُكُمْ وَعَشِيرَتُكُمْ وَأَمْوَٰلٌ
ٱقْتَرَفْتُمُوهَا وَتِجَٰرَةٌ تَخْشَوْنَ كَسَادَهَا وَمَسَٰكِنُ تَرْضَوْنَهَآ أَحَبَّ إِلَيْكُم مِّنَ ٱللَّهِ
وَرَسُولِهِۦ وَجِهَادٍ فِى سَبِيلِهِۦ فَتَرَبَّصُوا۟ حَتَّىٰ يَأْتِىَ ٱللَّهُ بِأَمْرِهِۦ ۗ وَٱللَّهُ لَا يَهْدِى ٱلْقَوْمَ
ٱلْفَٰسِقِينَ ﴿٢٤﴾

பொருள்: "[நபியே!] நீர் கூறும்: உங்களுடைய தந்தைமார்களும், பிள்ளைகளும், சகோதரர்களும், மனைவிமார்களும், குடும்பத்தார்களும், நீங்கள் சேகரித்துள்ள செல்வங்களும், நஷ்டம் ஏற்பட்டு விடுமோ என நீங்கள் அஞ்சுகின்ற [உங்கள்] வியாபாரமும், நீங்கள் விருப்பத்துடன் வசிக்கும் வீடுகள் [ஆகிய அனைத்தும்] அல்லாஹ்வையும் அவனது தூதரையும், அவனுடைய வழியில் அறப்போர் புரிவதையும் விட உங்களுக்குப் **பிரியமானவையாக** இருக்குமானால், அல்லாஹ் தனது கட்டளையை [வேதனையைக்] கொண்டு வருவதை எதிர்பார்த்து இருங்கள் - அல்லாஹ் பாவிகளை நேர்வழியில் செலுத்துவதில்லை"

எனது சகோதரர்களே! தற்போது ஓதப்பட்ட வசனத்தில், இறைத்தூதர் முஹம்மது[ஸல்] அவர்கள் மீதான நமது **அன்பு** நிஜ வாழ்க்கையில் **வெளிப்படுத்தப்பட** வேண்டுமென அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா நமக்கு நினைவூட்டுகிறான். இதை மனதில் கொண்டு, பின்வரும் மூன்று நினைவூட்டல்களைப் பற்றிச் சிந்திப்போமாக! அதன் மூலம் அவர்கள்[ஸல்] மீதான நமது **அன்பு** நமது செயல்களாலும் வாழ்க்கை முறையாலும் நிரூபிக்கப்பட வேண்டும்.

**முதலாவதாக: அவர்களின்[ஸல்] "சுன்னாஹ்" எனும் வழிமுறையைக் கற்றுப் பின்பற்ற வேண்டும்**

நீங்கள் கற்றுக் கொள்ள முயற்சிக்கும் போது, தகுதிவாய்ந்த, நம்பிக்கைக்குரிய ஆசிரியர்களிடமிருந்து கற்றுக் கொள்ள முயலுங்கள். இறைத்தூதர்[ஸல்] அவர்களின் "சுன்னாஹ்" வை அறிந்து, அதைச் **செயல்படுத்துங்கள்**. ஏனெனில், அவ்வாறு செய்வதானது அவர்கள்[ஸல்]

மீதான நமது **அன்பை** ஆழப்படுத்தும். நாம் "சுன்னாஹ்" வை எவ்வளவு அதிகமாகச் **செயல்படுத்துகிறோமோ** அவ்வளவு அதிகமாக அதன் அழகையும் சிறப்பையும் உணர்வோம்; மேலும், நமது அன்றாட வாழ்வில் அவர்களுடைய போதனைகளின் மற்ற பகுதிகளைக் கண்டறிந்து, பின்பற்றவும் முயல்வோம்.

**இரண்டாவதாக: இறைத்தூதர்[ஸல்] அவர்களை, செயல்களின் மூலம் நேசிப்பது ஒரு பொறுப்பான காரியமாகும்.**

"அறிவை வழங்கப்பட்டவர்கள் அந்த அறிவைக் கொண்டு என்ன செய்தார்கள் என்பது குறித்து, மறுமைத் தீர்ப்பு நாளில் விசாரிக்கப்படுவார்கள்" என இறைத்தூதர்[ஸல்] அவர்கள் விடுத்த எச்சரிக்கையை நாம் நினைவில் கொள்ள வேண்டும். [ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் அத்-திர்மிதி ரஹ்].

இறைத்தூதர்[ஸல்] அவர்கள் நவின்றுள்ள இந்த ஹதீது தெரிவிக்கும் கருத்து யாதெனில், நாம் கற்கும் ஒவ்வொரு போதனையும், இறைத்தூதர்[ஸல்] அவர்களின் வாழ்க்கை வரலாற்றிலிருந்து நாம் பெறும் ஒவ்வொரு பாடமும் நம்மிடம் ஒப்படைக்கப்படும் "அமானத்" அதாவது, நாம் பொறுப்பேற்க வேண்டிய அமானிதம் என நமக்குத் தெரிவிக்கிறது. இந்தப் பொறுப்பைப் பற்றி நாம் சரியாக அறிந்திருப்பதானது, ஒழுக்கத்தை வளர்த்து, நமது வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் இறைத்தூதர்[ஸல்] அவர்களின் முன்மாதிரியை நாம் பின்பற்ற உதவுகிறது.

**மூன்றாவதாக: சிறிய முயற்சிகளுடன் தொடங்கி, தொடர்ந்து சீராகச் செயல்பட வேண்டும்**

அன்பிற்குரிய ஜமாஅத்தார்களே! இறைத்தூதர்[ஸல்] அவர்கள் மீதான உண்மையான **அன்பு** செயல்களின் மூலமே **வெளிப்படுத்தப்பட** வேண்டும். ஒரு நல்ல காரியத்தைச் செய்வதற்கு முன்பாக "பிஸ்மில்லாஹ்" என்று நாம் கூறுவது போல், "சுன்னாஹ்" வின் சிறிய செயல்களைத் தொடர்ந்து செய்து, அவை நமது அன்றாட வாழ்வின் ஒரு பகுதியாக ஆகும் வரை சீராகச்

**செயல்படுத்த** வேண்டும். இறைத்தூதர்[ஸல்] அவர்கள் ஹதீதில் நவின்றுள்ளார்கள். அதன் பொருள்:
*"செய்யப்படும் நற்செயல் சிறியதாக இருந்தாலும், தொடர்ந்து செய்யப்படும் நற்செயலே அல்லாஹ்வுக்கு மிகவும் **விருப்பமானதாகும்"*** [ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்கள்: இமாம் புகாரி மற்றும் இமாம் முஸ்லிம் ரஹ்]

**அன்பிற்குரிய சகோதரர்களே!**
இந்தக் "குத்பா" பிரசங்கத்தின் மூலம், இறைத்தூதர் முஹம்மது[ஸல்] அவர்களை நாம் உண்மையாகவே **நேசிக்கின்றோமா**? என்ற கேள்விக்குப் பதிலளிப்பதற்கு, இறைத்தூதர்[ஸல்] அவர்களைப் பற்றி இதயத்தில் உணரப்படும் **அன்பிலிருந்து** தொடங்கி, வார்த்தைகளில் **வெளிப்படுத்தப்பட்டு** பின்னர் **செயல்** மற்றும் நடைமுறையின் மூலம் தொடர வேண்டிய ஒரு முழுமையானப் பயணம் தேவை என்பதை இப்போது நாம் புரிந்து கொள்கிறோம்.

ஆகவே, இந்த பள்ளிவாசலை விட்டுச் செல்லும் போது, அடிக்கடி புன்னகைப்பது, ஒருவரையொருவர் அன்புடன் நடத்துவது போன்ற எளிய செயல்களைச் செய்தாவது, நமது வாழ்வில் ஒரு சிறிய "சுன்னாஹ்" வைச் செயல்படுத்த உறுதிமொழி எடுப்போமாக!

இறுதியாக, இறைத்தூதர் முஹம்மது[ஸல்] அவர்கள் பிறந்த ரபீவுல் அவ்வல் மாதத்தையும், அவர்களை நாம் அதிகம் **நேசிக்கும்** மாதத்தையும் நினைவில் கொண்டு, இமாம் இப்னு ஹிப்பான் [ரஹ்] அவர்கள் பதிவு செய்து அறிவிக்கும் ஒரு ஹதீதுடன் இன்றைய "குத்பா" பிரசங்கத்தை நிறைவு செய்கிறேன். ஒருமுறை, இறைத்தூதர்[ஸல்] அவர்கள்: "யா அல்லாஹ்! ஆயிஷாவின் கடந்த கால மற்றும் எதிர்காலப் பாவங்கள் அனைத்தையும், வெளிப்படையாகச் செய்தவை மற்றும் மறைவாகச் செய்தவை, சிறியவை மற்றும் பெரியவை அனைத்தையும் மன்னிப்பாயாக!" எனப் பிரார்த்தனை செய்ததை, செய்யிததினா ஆயிஷா [ரலி] அவர்கள் கேட்டார்கள்; அதன் காரணமாக ஆயிஷா [ரலி] அவர்களுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது. அப்போது இறைத்தூதர்[ஸல்] அவர்கள்: ஆயிஷாவே! இப்போது நான் செய்த

இப்பிரார்த்தனையைக் கேட்டு நீ மகிழ்ச்சியடைகிறாயா? என ஆயிஷா [ரலி] யிடம் கேட்டார்கள்; பின்பு "ஆயிஷாவே அறிந்து கொள்! இப்பிரார்த்தனையை நான் உனக்கு மட்டுமல்ல, ஒவ்வொரு தொழுகையிலும் நான் என் சமுதாய மக்களுக்காகவும் செய்யும் பிரார்த்தனையாகும்" எனக் கூறினார்கள்.

ஆகவே, இறைத்தூதர்[ஸல்] அவர்கள் மீதுள்ள நமது **அன்பின்** அடையாளமாக, அவர்களின் இந்தப் பிரார்த்தனையை நமது வாழ்க்கைத் துணைவியர் மற்றும் சமுதாய மக்கள் விஷயத்திலும் ஓதி, **செயல்படுத்துவதற்கு** வெள்ளிக்கிழமையின் இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்வோமாக! எல்லாம் வல்ல அல்லாஹ், நம்மனைவரையும் இறைத்தூதர் முஹம்மது[ஸல்] அவர்களை உண்மையாகவே **நேசிப்பவர்களில்** ஒருவராக ஆக்குவானாக! மேலும், நம்மனைவரையும் தனது சொர்க்கத்தில் இறைத்தூதர்[ஸல்] அவர்களுடன் ஒன்று சேர்ப்பானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ العَظِيْمَ لِي وَلَكُمْ، فَاسْتَغْفِرُوْهُ إِنَّهُ هُوَ الغَفُوْرُ الرَّحِيْمُ.**

## இரண்டாவது பிரசங்கம்

الحَمْدُ للهِ حَمْدًا كَثِيرًا كَمَا أَمَرَ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ الله، اِتَّقُوا اللهَ تَعَالَى فِيمَا أَمَرَ، وَانتَهُوا عَمَّا نَهَاكُم عَنْهُ وَزَجَرَ.

أَلَا صَلُّوا وَسَلِّمُوا عَلَى النَّبِيِّ الْمُصْطَفَى، فَقَدْ أَمَرَنَا اللهُ بِذَلِكَ حَيْثُ قَالَ فِي كِتَابِهِ العَزِيزِ: إِنَّ اللهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيهِ وَسَلِّمُوا تَسْلِيمًا. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ.

وَارْضَ اللَّهُمَّ عَنِ الخُلَفَاءِ الرَّاشِدِينَ المَهْدِيِّينَ سَادَاتِنَا أَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِيِّ، وَعَن بَقِيَّةِ الصَّحَابَةِ وَالقَرَابَةِ وَالتَّابِعِينَ، وَتَابِعِي التَّابِعِينَ، وَعَنَّا مَعَهُم وَفِيهِم بِرَحْمَتِكَ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.

اللَّهُمَّ اغْفِرْ لِلمُؤْمِنِينَ وَالمُؤْمِنَاتِ، وَالمُسْلِمِينَ وَالمُسْلِمَاتِ، الأَحْيَاءِ مِنهُم وَالأَمْوَاتِ. اللَّهُمَّ ادْفَعْ عَنَّا البَلَاءَ وَالوَبَاءَ وَالزَّلَازِلَ وَالمِحَنَ، مَا ظَهَرَ مِنْهَا وَمَا بَطَنَ، عَن بَلَدِنَا خَاصَّةً، وَسَائِرِ البُلْدَانِ عَامَّةً، يَا رَبَّ العَالَمِينَ. اَللَّهُمَّ انْصُرْ إِخْوَانَنَا اْلمُسْتَضْعَفِيْنَ فِي غَزَّة وَفِي فِلِسْطِينَ وَفِيْ كُلِّ مَكَانٍ عَامَّةً، يَا أَرْحَمَ الرَّاحِمِينَ. اَللَّهُمَّ بَدِّلْ خَوْفَهُمْ أَمْنًا، وَحُزْنَهُمْ فَرَحًا، وَهَمَّهُمْ

فَرَجًا، يَا رَبَّ العَالَمِينَ. اَللَّهُمَّ اكْتُبِ السِّلْمَ وَالسَّلاَمَ وَاْلأَمْنَ وَاْلأَمَانَ لِلْعَالَمِ أَجْمَع يَا لَطِيْف. رَبَّنَا آتِنَا فِي الدُّنيَا حَسَنَةً، وَفِي الآخِرَةِ حَسَنَةً، وَقِنَا عَذَابَ النَّارِ.

عِبَادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالعَدْلِ وَالإِحْسَانِ وَإِيتَاءِ ذِي القُرْبَى، وَيَنْهَى عَنِ الفَحْشَاءِ وَالْمُنكَرِ وَالبَغْيِ، يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ، فَاذكُرُوا اللهَ العَظِيمَ يَذْكُرْكُمْ، وَاشْكُرُوهُ عَلَى نِعَمِهِ يَزِدْكُمْ، وَاسْأَلُوهُ مِن فَضْلِهِ يُعْطِكُم، وَلَذِكْرُ اللهِ أَكْبَرُ، وَاللهُ يَعْلَمُ مَا تَصْنَعُونَ.